அமினுதீன்

-எதிர்-

உத்தரபிரதேச மாநில அரசு மற்றும் ஒருவர்

(குற்றவியல் மேல்முறையீடு எண்.1669/2022)

செப்டம்பர் 23, 2022

(மாண்புமிகு நீதியரசர்கள் திரு. தினேஷ் மஹேஸ்வரி

மற்றும் திரு. கிருஷ்ணா முராரி)

பிணை - சமமாக, வழங்குதல் - நியாயப்படுத்த முடியாத போது - தண்டனைச் சட்டம், 1860 - பிரிவுகள் 147, 148, 149, 302, 352 மற்றும் 34 - முடிவு: உடன் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்ட பிணை உச்சநீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டபோது மற்றும் உடன் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கிய அத்தகைய பிணை காரணத்தால் மட்டும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு பிணை வழங்கப்பட்டதால், எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யவேண்டியதாகிறது - இந்த வழக்கில், உயர்நீதிமன்றம் மேம்போக்காக நடந்து கொண்டுள்ளது மற்றும் கைவசம் உள்ள வழக்கில் உள்ள முக்கிய அம்சங்களை கருதாது, மேல்முறையீட்டாளரின் மகனை கழுத்தை மற்றும் மார்பைச் சுற்றி வெட்டுக்காயம் மற்றும் குத்துக்காயம் உள்பட 8 கொடுங்காயங்களால் பட்டப்பகலில் நடந்த கொடுமையான கொலை - உயர்நீதிமன்றத்தால் வழக்கின் முக்கிய அம்சங்களை பார்க்காமலேயே உள்ளது என்ற குறைபாட்டினாலும் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு பாதிப்படைகிறது - முதல் தகவல் அறிக்கையில்

குறிப்பாக 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் தாக்கியவர்களில் ஒருவர் என பெயரிடப்பட்டுள்ளதுபோது மற்றும் குற்றச்சாட்டில் கூறப்பட்ட தன்மைகளையும், காயங்களின் தன்மைகளையும் பார்க்கையில் அல்லது சாத்தியமற்றதை அரசுத்தரப்பு வழக்கின் முகாந்திரம் என கூறமுடியாது - எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது - 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் சரண் அடையவேண்டும் - சரணடைந்த பின்னர் உரிய காலகட்டத்தில் அவர் பிணைக்காக புதிய விண்ணப்பம் தாக்கல் செய்தல் மற்றும் முறையீடு செய்தால் அத்தகைய விண்ணப்பம் அதன் நற்கூறுகளின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட வேண்டும்.

மஹிபால் -எதிர்- ராஜேஷ் குமார் (2020) 2 எஸ்.சி.சி. 118 : [2019] 14 எஸ்.சி.ஆர். 529 – குறிப்பிடப்படுகிறது.

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்</u>

[2019] 14 எஸ்.சி.ஆர். 529 குறிப்பிடப்பட்டுள்ளது பத்தி 13

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண்.1669/2022.

அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் குற்றவியல் பல்வகை பிணை விண்ணப்ப மனு எண்.20894/2020-ல் 03.12.2020 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

அனிலேந்தர பாண்டே, வாஹித் ஹுசைன், நதீம் ஹுசைன், சந்தீப் - மேல்முறையீட்டாளருக்கான வழக்குரைஞர்கள்.

ஷஷாங்க் சேகர் சிங், பஹர் யூ. பர்க்கி, அஃப்தாப் அலி கான், டி.எஸ்.மிஸ்ரா - எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கான வழக்குரைஞர்கள்.

இந்நீதிமன்ற தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் திரு. தினேஷ் மஹேஸ்வரி அவர்களால் பகரப்பட்டது.

அனுமதி வழங்கப்பட்டது.

2. உத்தரபிரதேச மாநிலம், காஸ்கஞ் மாவட்டம், காஸ்கஞ் காவல் நிலையத்தில், இந்திய தண்டனைச் சட்டம், 1860, (சுருக்கமாக இ.த.ச.) பிரிவுகள் 147, 148, 149, 302, 352 மற்றும் 34-ன் கீழ் உள்ள குற்றங்களுக்காக 10.07.2019-ல் முதல் தகவல் அறிக்கை எண்.438/2019 மேல்முறையீட்டாளரின் கோரிக்கையின்படி பதிவு செய்யப்பட்டு அலகாபாத் உயர்நீதிமன்றத்தால் குற்றவியல் பல்வகை பிணை விண்ணப்ப எண்.20894/2020-ல் 03.12.2020-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து அவர் இந்த அனுமதி மற்றும் சிறப்பு அனுமதி மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

2.1. எதிர்ப்புக்குள்ளான உத்தரவின் மூலம், அதே நிலையில் காணப்பட்ட உடன் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஏற்கனவே பிணை வழங்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு, குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களில் ஒருவரான (இங்குள்ள 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு) பிணை சலுகையை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளது. சி.அ.ம.(குற்றவியல்) எண்.6744/2020 லிருந்து எழுந்த குற்றவியல் மேல்முறையீடு எண்.317/2021-ல் வழங்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவில் இந்நீதிமன்றம், ஒரே நிலையில் அமைந்த உடன் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு

பிணை வழங்கிய உத்தரவை நிராகரித்துள்ளது என்பதை, மற்றவற்றிற்கிடையே மேல்முறையீட்டாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

3. சுருக்கமாகக் கூறின், அந்த விடயத்தின் தொடர்புடைய அச்சங்கதிகளின் பின்புலன் வருவன: மாடுகளிடமிருந்து பால் பெறுவதற்காக அவரது வீட்டிலிருந்து வந்த பொது, 7 நபர்கள் கத்தி மற்றும் கூர்மையான ஆயுதங்களால் அவரது மகன் டேனிஷைத் தாக்கியுள்ளனர் என்ற புகாருடன் 10.07.2019 அன்று பிற்பகல் சுமார் 9.08 மணிக்கு, மேல்முறையீட்டாளர் முதல் தகவலறிக்கையை தாக்கல் செய்தார். அத்தகைய தாக்குதலால் பாதிக்கப்பட்ட டேனிஷ் கொடுங்காயம் அடைந்து சம்பந்த இடத்திலேயே இறந்ததாக மேலும் கூறப்படுகிறது. நிசார் மற்றும் ஜலீல் ஆகிய இரு நபர்கள் சம்பவத்தின் கண்ணுற்ற சாட்சி என கூறப்படுகிறது. இறந்து போனவரின் உடலில், கூராய்வுக்கு முன்பு 8 காயங்கள் காணப்பட்டன, அவற்றில் பல கழுத்து மற்றும் மார்பைச் சுற்றியுள்ள வெட்டுக்காயமாகவும், குத்துக்கயமாகவும் இருந்தன. குற்றஞ்சாட்டப்பவர்களில் ஒருவரான இம்ரான் 11.07.2019-ல் கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணை அதிகாரியின் கூற்றுப்படி, தற்போதுள்ள 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் உட்பட மற்ற குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் தலைமறைவாயுள்ளனர், அவர்களுக்கு பிணையற்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்டு மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973, பிரிவு 82-ன் கீழ் அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாகியுள்ளது. பிற குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பல்வேறு தேதிகளில் சரண் அடைந்தார்கள் மற்றும்

கைது செய்யப்பட்டார்கள். 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், 02.09.2019 அன்று சரண் அடைந்தார்.

4. 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட பிணை விண்ணப்பம், அமர்வு நீதிமன்றத்தால் மறுக்கப்பட்டுள்ளது மற்றும் பின்னர் அவர் சார்பாக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட முதல் பிணை விண்ணப்பமான குற்றவியல் பல்வகை பிணை விண்ணப்ப மனு எண்.4842/2020-ல் 10.02.2020 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. பின்னர், 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், எண்.20894/2020 உடைய இரண்டாவது பிணை விண்ணப்பம் தாக்கல் செய்து அது பரிசீலிக்கப்பட்டு, 03.12.2020 தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவு மூலம் உயர்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னர், உடன் குற்றஞ்சாட்டப்பட்டவரான, பாஹிம்-ன் பிணை விண்ணப்பம் எண்.6083/2020 உயர்நீதிமன்றத்தால் 25.02.2020-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

5. 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக இரண்டாவது பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது குறித்து, முன்வைக்கப்பட்ட வாதம் என்னவென்றால், அதேநிலையில் உள்ள நபர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளதால் அவரும் இணையான அதே பரிகாரத்தைப் பெற உரியவர் என்பதுதான். இந்த வாதம் உயர்நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டு, உடன் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு பிணை வழங்கப்பட்ட காரணத்தால், 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை

உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள முனைந்து மற்றும் சில நிபந்தனைகளுடன் அவரை பிணையில் விடுவிக்க ஆணையிட்டது. எதிர்ப்புக்குள்ளான உத்தரவில், மேல்முறையீட்டாளரின் சார்பாக முன்வைக்கப்பட்ட வாதங்கள், அரசுக்கான வழக்குரைஞரின் எதிர்ப்புரை மற்றும் உயர்நீதிமன்றத்தின் பரிசீலனை ஆகிய அம்சங்கள் பின்வருமாறு:

"மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர், விண்ணப்பதாரர் இவ்வழக்கில் தவறாகச் சேர்க்கப்பட்டதாக வாதிட்டார். அணைந்து குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராகவும் பொதுவான குற்றச்சாட்டுகள் இருந்தன. உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்களான பைம், நசீர் மற்றும் கம்ருதீன் முறையே 25.02.2020, 17.06.2020 மற்றும் 26.08.2020 நாளிட்ட குற்றவியல் பல்வகை பிணை விண்ணப்ப மனு எண்கள்.6083/2020, 11840/2020 மற்றும் 21839/2020-ல் இந்நீதிமன்றத்தின் இணை நீதியர் ஆயங்களில் பிணை தரப்பட்டுள்ளது என அடுத்ததாக சமர்ப்பிக்கப்பட்டது. உடன் குற்றஞ்சாட்டப்பட்ட பைம்-க்கு வழங்கிய பிணை உத்தரவின் நகல், பிணை விண்ணப்பத்திற்கு ஆதரவாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆணையுறுதி ஆவணத்துடன் பக்கம் எண்.60-ல் இணைக்கப்பட்டுள்ளது, அதேவேளையில் நசீர் மற்றும் கம்ருதீன் ஆகியோருக்கு பிணை வழங்கிய உத்தரவுகளின் நகல்கள் நீதிமன்றத்தில் இன்று தாக்கல் செய்யப்பட்டு அவை பதிவிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. உடன்

குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்ட பிணை போன்ற ஒரே அடிப்படையில் விண்ணப்பதாரரின் வழக்கும் உள்ளதால், சமநிலை காரணமாக அவருக்கும் பிணை வழங்கலாம் என வாதம் செய்யப்பட்டது. ஆணையுறுதி ஆவணத்தின் பத்தி 21-ல் கூறியவாறு, விண்ணப்பதாரருக்கு எந்த குற்ற பின்புலமும் இல்லையென்றும் மற்றும் அவர் 02.09.2019-லிருந்து சிறைச்சாலையில் இருந்துள்ளார் என்றும் எனவே, விசாரணை நிலுவையிலிருக்கும்போது விண்ணப்பதாரரை பிணையில் விடுவிக்கலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

மாறாக, அரசு சார்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் பிணைக்கான வேண்டுதலை எதிர்த்தார் ஆனால், விண்ணப்பதாரருக்கெதிராக குற்ற முன்னோடி இல்லை என்ற சங்கதியை மறுக்கவில்லை.

தரப்பினர்களுக்காக முன்னிலையான வழக்குரைஞர்களின் வாதங்களை கேட்டும் மற்றும் சங்கதிகளை கண்டறிந்த பின்னர், ஒரே மாதிரி நிலையில் இருந்த உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு இந்நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டுள்ளதால் விண்ணப்பதாரரும் பிணையில் விடுவிக்கப்படலாம் என்பதாகும்."

6. இவ்வழக்கில், 12.07.2021 அன்று மேல்முறையீட்டை அனுமதிக்கும்படியான மனுவை தற்போதைய மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்யவும் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு அறிவிப்பு அனுப்பவும்

இந்நீதிமன்றம் அனுமதி அளித்தது. விரிவான எதிர் ஆணையுறுதி ஆவணங்கள் மாநில அரசு சார்பாகவும் மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாகவும் தாக்கல் செய்யப்பட்டன. மேல்முறையீட்டாளர் சார்பாக வலியுறுத்தப்பட்ட வாதங்களை மாநிலம் ஆதரவு செய்த போதிலும், எதிர்ப்புக்குள்ளான உத்தரவை ஆதரித்து, 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

7. உடன் குற்றஞ்சாட்டப்பட்டவரான பாஹிம்-க்கு பிணை வழங்கி, 25.02.2020 தேதியிடப்பட்ட உத்தரவு உட்பட உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு சாதகமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளின் காரணத்தால் மட்டுமே உயர்நீதிமன்றம் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கும் பிணை வழங்கியுள்ளது என்று முதலில் வாதிட்டதுடன், பின்னர் உயர்நீதிமன்றத்தால் உடன் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு சாதகமாக, வழங்கப்பட்ட உத்தரவை இந்நீதிமன்றம் ஏற்காமல், குற்றவியல் மேல்முறையீடு எண்.317/2021-ல், 15.03.2021 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவு மூலம் நீக்கறவு செய்தது என்று மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டார். இந்த விடயத்தை கருத்தில் கொண்டு பார்க்கையில், கற்றறிந்த வழக்குரைஞரின் கூற்றுப்படி 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு பிணை வழங்கப்பட்ட அடிப்படையே தகர்க்கப்பட்டதால், எதிர்ப்புக்குள்ளான உத்தரவு அதுவே நிலைநிறுத்தத்தக்கதல்லாது நீக்கறவு செய்ய வேண்டியதாகிறது.

7.1. 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு பிணை வழங்கும்போது, 7 நபர்களால் கூர்மையான ஆயுதங்களால் தாக்கப்பட்டு 8 கொடுங்காயங்கள்

உடம்பில் முக்கிய பகுதிகளில் ஏற்பட்டு கொடுமையான முரட்டுத்தனமான முறையில் மேல்முறையீட்டாளரின் மகன் பட்டப்பகலில் கொலை செய்யப்பட்டார் என்ற இந்த வழக்கை உயர்நீதிமன்றம் பரிசீலிக்க முற்றிலும் தவறிவிட்டது என மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்குரைஞர் மேலும் சமர்ப்பித்தார். அத்தகைய விடயத்தில், விசாரணை துவங்கும் முன்னரேகூட பிணை வழங்கி உத்தரவு பிறப்பித்தது முற்றிலும் சட்டவிரோதமானது, தவறான நடைமுறை மற்றும் நீக்கறவு செய்வதற்குரியது என்று கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டார்.

8. மேல்முறையீட்டாளர் சார்பாக வைக்கப்பட்ட வாதங்களை முழுவதுமாக, மாநிலத்திற்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் ஆதரித்து மற்றும் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யவேண்டியதாகும் என சமர்ப்பித்தார்.

9. மாறாக, 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்குரைஞர், மேல்முறையீட்டாளரின் சார்பான வாதத்தை எதிர்த்து, உடன் குற்றஞ்சாட்டப்பட்ட பாஹிம்-க்கு வழங்கப்பட்ட பிணை உத்தரவை இந்நீதிமன்றம் நீக்கறவு செய்ததால் மட்டுமே எதிர்ப்புக்குள்ளான உத்தரவில் தலையிட வேண்டியதில்லை என வாதிட்டார்.

9.1. 15.03.2021 தேதியிடப்பட்ட மேற்படி உத்தரவின் முக்கியமான அம்சம் என்னவென்றால் எதிர்மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பாக எதிர் ஆணையுறுதி ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், கேட்புகை நாளன்று, மேற்படி உடன் குற்றஞ்சாட்டப்பவர் சார்பாக

முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் ஒத்திவைக்கக் கோரி, அது நீதிமன்றத்தால் மறுக்கப்பட்டது என்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டார். எனவே, கற்றறிந்த வழக்குரைஞர் கூற்றுப்படி, 15.03.2021 தேதியிடப்பட்ட உத்தரவானது 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் நலன்களுக்கு எதிராக செயல்படாது.

9.2. 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாக பிணை வழங்குவதற்கான வழக்கு வலுவாக நிறுவப்பட்டது என்றும், உயர்நீதிமன்றம் அவருக்கு பிணை வழங்கியது சரியே என கற்றறிந்த வழக்குரைஞர் மேலும் சமர்ப்பித்தார். 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், 02.09.2019 வரை காவலில் வைக்கப்பட்டிருந்தார்; அவருக்கு எதிர்மறையான வரலாறோ; எதிர்மறையான பதிவுருக்களோ ஏதும் இல்லை; பிரச்னைக்குரிய சம்பவம் குறித்து அவருக்கு எந்த குறிப்பிட்ட பங்கு இல்லை; 7 குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் இறந்தவரின் உடலில் ஒரே நேரத்தில் 7 கத்திகள் வைத்து காயம் ஏற்படுத்தியிருக்க முடியாது என்ற அறிவியல் காரணத்தினால் அரசுத்தரப்பின் வாதம் பொய்யானது என்பது தெளிவாகிறது ஆகிய காரணிகளை அவரது வாதங்களுக்கு ஆதரவாக சார்ந்து நின்றார்.

9.3. விசாரணையில் தற்போதைய மேல்முறையீட்டாளரின் வாக்குமூலம் ஏற்கனவே முடிந்துவிட்டது மற்றும் சாட்சியங்களை கலைத்துவிட்டார் என குற்றச்சாட்டு இல்லை என்றும் கற்றறிந்த வழக்குரைஞர் மேலும் சமர்ப்பித்தார். எனவே, கற்றறிந்த வழக்குரைஞரின் கூற்றுப்படி, 2-ஆம்

எதிர்மேல்முறையீட்டாளருக்கு பிணை வழங்கிய எதிர்ப்புக்குள்ளான உத்தரவுக்கு தலையீடு ஏதும் தேவையில்லை.

10. எதிர் வாதங்களில், கண்ணுற்ற சாட்சியான நசீர் மற்றும் ஜலீல் ஆகியோரை விசாரிக்க வேண்டியுள்ளது மற்றும் குற்றச்சாட்டின் தன்மைகளை மற்றும் உடன் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் தொடர்பாக இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவுகளை நோக்கும்போது, எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யப்பட வேண்டியதாகிறது என மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைத்தார்.

11. எதிர் வாதங்களை ஆர்வமாக கருத்தினை எடுத்துக்கொள்ளும் மற்றும் பதிவுகளை ஆய்வு செய்தும், எந்த நிலையிலும் 03.12.2020 நாளிட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவை ஏற்க முடியாது என நாங்கள் தெளிவாக இருக்கிறோம்.

12. அவரது வழக்கு ஒரே மாதிரியான நிலைபாட்டைக் கொண்டுள்ளதால், உடன் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்டதுபோல், அதே பரிகாரத்தை பெற அவருக்கு உரிமை உள்ளது, பிணை கோரும் போது தற்போதைய 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக உயர்நீதிமன்றம் முன்வைக்கப்பட்ட வாதங்களின் முக்கிய பகுதியான, சாரம் எதிர்ப்புக்குள்ளான உத்தரவைப் பார்க்கும்போது தெளிவாகிறது. பிற வாதங்கள் என்னவென்றால், 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் 02.09.2019 வரை காவலில் இருந்தார் என்றும்; அவருக்கு குற்ற பின்புலன் இல்லையென்றும்; விசாரணைக்கு அவகாசம்

எடுத்துக் கொள்ளப்படும் என்றும் மேலும் சமர்ப்பித்தார். அவ்விதம் அழைக்கப்பட்ட ஒரே மாதிரிநிலையில் உள்ள உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு ஏற்கனவே பிணை வழங்கப்பட்டுள்ளது என்ற காரணத்திற்காக மட்டுமேயன்றி பிற விடயங்களைக் கருதாது உயர்நீதிமன்றம் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு பிணை வழங்க முற்பட்டது. உடன் குற்றஞ்சாட்டப்பட்ட பாஹிமுக்கு பிணை வழங்கிய உத்தரவின் சங்கதி இந்நீதிமன்றத்தால் கடுமையான எதிர்ப்பை சந்தித்தது என்பது விவாதிக்கப்படாமல் உள்ளது.

13. சம்பந்தப்பட்ட கருத்துக்களை புறந்தள்ளி மற்றும் இந்திய அரசியலமைப்பு சட்டம் வகுமுறைக்கூறு 21-ல் உள்ள அடிப்படையை மட்டும் மேற்கோள்காட்டி, உயர்நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது என்ற பொருண்மையை 15.03.2021 நாளிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவில் இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டது. 15.03.2021 நாளிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவில் இந்நீதிமன்றத்தின் தொடர்புடைய கருத்துரையும் மற்றும் குறிப்புரையும் கீழே பயனுற குறிப்பிடப்பட்டுள்ளது:-

> "7. மேல்முறையீட்டாளரின் மகன் கொடூரமாக கொலை செய்யப்பட்டார் என்பதை சூழ்நிலைகள் குறிப்பிடுகின்றது. சடலக் கூராய்வு அறிக்கையில், கூராய்வுக்கு முன்புள்ள 8 காயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. குற்றம் பட்டப்பகலில் நடந்துள்ளதாக கூறப்படுகிறது. 17.15 மணிக்கு நடைபெற்றதாகக் கூறப்பட்ட சம்பவத்தை அன்றே 4 மணி கால அளவுக்குள் 21.08. மணிக்கு முதல் தகவல்

அறிவிக்கை குற்ற எண்.438/2019-ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. விசாரணை முடிவுற்ற பின், குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973, பிரிவு 173-ன் கீழ் உரிய நீதிமன்றம் முன்பாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நீதிமன்றத்தின் பல தீர்ப்புகளில், பிணை வழங்கும்போது காரணங்களை நீதிமன்றம் கூறவேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், மஹிபால் -எதிர்- ராஜேஷ் குமார் [(2020) 2 எஸ்.சி.சி. 118] என்ற வழக்கின் சமீபத்திய முடிவை, உத்தரபிரதேச அரசு சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் செல்வி. பன்சூரி ஸ்வராஜ் சார்ந்துள்ளார். இரு நீதிபதிகள் சார்பாக, எங்களில் ஒருவரான (மாண்புமிகு நீதிபதி திரு. டி.ஒய். சந்திர சூட்) அவர்களின் கருத்துரை:-

> "25. "பதிவுருக்களைப் பார்வையிட்டோம்" மற்றும் "வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் பேரில்" என்று பதிவு செய்வதால் மட்டுமே நியாயமான காரணத்துடன் கூடிய நீதிமுறை உத்தரவின் நோக்கத்தை பயன்படுத்துவதாக கருத முடியாது. பிணை மறுக்கப்படுவது அல்லது வழங்கப்படுவது தொடர்பாக நீதிபதிகளின் மனதில் இருந்த காரணிகள் வழங்கப்பட்ட உத்தரவில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதே நீதித்துறையில் உறுதி செய்யப்பட்டுள்ள நீதித்துறையின் வெளிப்படைத் தன்மையாகும். வெளிப்படையான நீதி என்பது, நீதி கிடைப்பது

மட்டுமல்லாமல் அது வெளிப்படையாகவும், சந்தேகமின்றியும் கிடைப்பதாக இருக்க வேண்டும் என்பதே அடிப்படை கருத்து. இந்த பொறுப்பின் மையமாக காரணத்துடன் கூடிய முடிவுகளாக இருக்குமாறு தருவது நீதிபதிகளின் கடமையாகும்; யாரெல்லாம் குற்றங்கள் செய்கிறார்களோ அவர்களுக்கு, நீதியைத் தடை செய்ய வாய்ப்பளிக்கக் கூடாது என்பதை உறுதி செய்வதற்காக, குற்ற வழக்கில் உள்ள தனி நபர்களின் சுதந்திரத்தையும் அதேபோல் குற்றவியல் நீதி அமைப்பின் பங்களிப்பையும் பொறுத்தே பிணை வழங்கும் வினா உள்ளது. அவர்கள் அந்த தீர்மானத்தை அடைந்ததற்கான அடிப்படையை விளக்குவதற்கு நீதிபதிகள் கடமைப்பட்டுள்ளனர்.

27. பிணை மறுத்து அல்லது வழங்கும் உத்தரவில் முடிவை உருக்கொள்ளும் காரணங்களை வழங்காது போனால், மனதை செலுத்தவில்லை என்ற ஊகத்திற்கு வழிவகுக்கும். அதற்கு இந்த நீதிமன்றத்தின் தலையீடு தேவைப்படும்.

8. வாதங்களைப் பரிசீலித்த பிறகு பெரிதும் வலியுறுத்தும் வகுமுறைக்கூறு 21-னை கருத்தில் கொண்டும் பிணை வழங்கப்படுகிறது என இந்த வழக்கில் உயர்நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. வகுமுறைக்கூறு 21-ன் கீழ் தனி நபர் சுதந்திரம் காக்கப்பட வேண்டும் என்ற அரசிலமைப்பு மதிப்பீடு

உயர்நீதிமன்றத்தாலும், மேலும் எல்லா நீதிமன்றங்களாலும் மதிக்கப்பட வேண்டும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. அதேபோன்று, அத்தகைய விடயங்களில், கடுமையான கொலை குற்றம் நடந்துள்ளபோது, குற்றஞ்சாட்டப்பட்டவரின் சுதந்திரம், குற்றஞ்சாட்டப்பட்டவரை பொறுப்பாக்குவதற்கு தேவைப்படும் குற்றவியல் நீதி அமைப்பு நிர்வாகத்தின் பொதுப்பயனுடன் கண்டிப்பாக சமநிலைப்படுத்திப் பார்க்கப்பட வேண்டும். தற்போதைய வழக்கில், கடுமையான குற்றப்பாடுள்ள வழக்கில் பிணை வழங்குவதை கட்டுப்படுத்துகின்ற அறுதியிடப்பட்ட கோட்டபாடுகளை கருத்தில் கொண்டு பார்க்கையில், உயர்நீதிமன்ற உத்தரவு தெளிவாக இல்லை என்று நாங்கள் கருதுகிறோம். பிணை வழங்குவதற்கான காரணம் ஏதும் நிறுவப்படவில்லை. பிணை வழங்குகையில் உயர்நீதிமன்றம் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய தொடர்புடைய சங்கதிகளை பரிசீலிக்கத் தவறியது.

9. மேற்சொன்ன சூழ்நிலைகளில், நாங்கள் மேல்முறையீட்டை அனுமதிக்கிறோம். 25 பிப்ரவரி, 2020 நாளிட்ட உயர்நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான உத்தரவை நீக்கறவு செய்கிறோம். இந்த உத்தரவின் விளைவாக, 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் உடனே சரணடைய வேண்டும்."

14. மேலே சொல்லப்பட்ட நிலை, சமமாக தற்போதைய வழக்கிற்கும் பொருந்தும். மேலும், உடன் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்ட பிணை இந்த நீதிமன்றத்தால் ஏற்கப்படாதபோது, உடன் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்ட அத்தகைய பிணையானது 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட பிணைக்கான ஒரே காரணமாக இருந்தால் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்வதற்குரியது.

15. இந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பாக முறையான வாதம் ஏதும் இல்லாதது என்ற 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் சார்பாக வைக்கப்பட்ட வாதங்கள். இந்த நீதிமன்றத்தின் அகவுரையின் கருத்தை எடுத்துவிடும் கழுத்து மற்றும் மற்றும் மார்பை சுற்றியுள்ள வெட்டுக்காயம் மற்றும் குத்துகாயம் உள்பட 8 கொடுங்காயங்களுடன் பட்டப்பகலில் கொடூரமாக, மேல்முறையீட்டாளரின் மகன் கொலையாகி இருக்கும்போது கைவசம் உள்ள முக்கிய அம்சங்களை கருத்தில் கொள்ளாமல் உயர்நீதிமன்றம் மேம்போக்காக நடந்து கொண்டது, இந்த வழக்கில் தெளிவாகிறது.

16. 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் வழக்கைப் பொறுத்தவரையில் உடன் குற்றஞ்சாட்டப்பவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது என்ற பொருண்மையை உயர்நீதிமன்றம் பரிசீலிக்க முற்பட்டாலும்கூட குறைந்தபட்சம், வழக்கின் தொடர்புடைய சங்கதிகளும், அதுபோல, 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் எப்படி ஒரே நிலையில் கருதப்பட்டுள்ளார் என்பதற்கான காரணங்களைக் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்று

தெரிவிக்கும்படி நாங்கள் வலியுறுத்தப்படுகிறோம். உயர்நீதிமன்றம், தொடர்புடைய சங்கதிகளை பரிசீலிக்கத் தவறியதால் அது சார்ந்துள்ள உத்தரவு பாதிப்படைகிறது மற்றும் அவ்வழக்கின் தொடர்புடைய அம்சங்கள் உயர்நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்படவில்லை என்ற குறைபாட்டின்பேரிலும் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு அதேபோல் பாதிப்படைகிறது.

17. கேள்விக்குரிய குற்றத்தின் கடுமையைப் பார்க்கும்போது, 02.09.2019 முதல் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் சிறையில் இருந்துள்ளார் அல்லது அவருக்கு எதிர்மறையான முன் வரலாறு ஏதும் இல்லை என்றும் கூறிய வாதங்கள் பிணை வழங்குவதற்கு ஏற்புடையதான வழக்காக இல்லை என்றும் சமர்ப்பிக்கப்பட்டது. அது தொடர்பாக, சம்பவம் 10.07.2019 அன்று நடந்த போதிலும், குற்றஞ்சாட்டப்பவர்களில் ஒருவர் 11.07.2019-ல் கைது செய்யப்பட்டுள்ளார், பிற குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவாகியுள்ளனர் மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் 02.09.2019-ல் சரணடைந்துள்ளார் என்ற விசாரணை அதிகாரியின் கூற்று, இவ்விஷயத்தில் கவனிக்கப்படாமல் இருந்திருக்கக்கூடாது. 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் பங்கு அல்லது அரசுத்தரப்பு வழக்கின் சந்தேகம் தொடர்புடைய வினாக்களை பொறுத்தவரையில், தற்போதைய நிலையில், முதல் தகவல் அறிக்கையில் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் தாக்கியவர்களில் ஒருவர் என குறிப்பிடப்பட்டுள்ளார் என்றும், குற்றச்சாட்டுகளின் தன்மை மற்றும் காயங்களின் தன்மையைப் பார்க்கும்போது அரசுத்தரப்பு, வழக்கு

முகாந்திரத்தை கற்பனையானது அல்லது சாத்தியமற்றது என்று குறிப்பிட முடியாது என்று கூறுவது போதுமானது.

18. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யப்படவேண்டியுள்ளது.

19. இந்த விஷயத்தின் இறுதியாகப் பிறப்பிக்கப்படவேண்டிய அவசியமான, உத்தரவு குறித்த வினாவினை நாங்கள் சீர்தூக்கிப் பார்த்தோம். 15.03.2021 நாளிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவில், உடன் குற்றஞ்சாட்டப்பவருக்கு 15.02.2020 நாளிட்ட உத்தரவில் வழங்கப்பட்ட பிணையை நிராகரித்து மற்றும் உடனே சரணடைய உத்தரவிட்டுள்ளது கவனிக்கப்பட வேண்டியுள்ளது. ஏறக்குறைய அதே நிலை இந்த வழக்கிற்கும் பொருந்தும். இதில், பிணை உத்தரவு 03.12.2020-ல் வழங்கப்பட்டுள்ளது, தற்போதைய வழக்கானது ஆரம்பத்தில் 12.07.2021 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஒரேயொரு சாட்சியான, அதாவது தற்போதைய மேல்முறையீட்டாளர் ஏற்கனவே விசாரிக்கப்பட்டிருந்தாலும், கண்ணுற்ற சாட்சி உட்பட பிற சாட்சிகளும் விசாரணையின்போது விசாரிக்கப்பட வேண்டும். தரப்பட்ட இச்சூழ்நிலையில் நீதியின் நலனைக் காக்கும் பொருட்டு 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் சரண் அடைந்தபின் மற்றும் உரிய நேரத்தில் புதிதாக பிணைக்கு விண்ணப்பிப்பது உரியது என நாங்கள் கருதுகிறோம்.

20. அதன்படி, மேற்சொன்னவற்றை கருத்தில் கொண்டு, இம்மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது; 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்

உடனடியாக சரணடைய வேண்டும் என்பதோடு, 03.12.2020 நாளிட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது. நீதியின் நலனைக் காக்க, 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் சரண் அடைந்த பிறகு புதிதாக பிணைக்கு விண்ணப்பித்தால் உரிய நேரத்தில் அத்தகைய விண்ணப்பம் அதன் நற்கூறுகளின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்று வகை செய்கிறது.

21. நீதியின் நலன் காக்க, நாங்கள் வழக்கின் தகுதிகளின் அடிப்படையில் எந்தவித தீர்ப்பையும் வழங்கவில்லை, இங்குள்ள எந்தவொரு தரப்பினர்களின் நலனுக்கு பாதகமாகவோ அல்லது விசாரணை நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்புரையில் தாக்கத்தை ஏற்படுத்தும் விதமாகவோ செயல்படாது என்பதை தெளிவாக்குகிறோம்.

22. நிலுவையிலுள்ள அனைத்து விண்ணப்பங்களும் தீர்வு செய்யப்படுகிறது.

மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."